# தெகியத்தகண்டி பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தெகியத்தகண்டி பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெகியத்தகண்டி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் சபைக்குக் கையளிக்கப்பட்ட பொது விளையாட்டரங்கு மற்றும் மயான நிலங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,185,177 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 485,914 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 4,571 | 3,389 | 1,182 |
| (ii) | வாடகை | - | - | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 977 | 1,163 | (186) |
| (iv) | ஏனைய வருமானம் | 9,644 | 8,821 | 823 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 455,083 ஆகும்.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 225,000 பெறுமதியான நான்கு சக்கர உழவு இயந்திரம் 05 வருடங்களுக்கு அதிகமான காலத்திலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் பஜாஜ் வகை முச்சக்கர வண்டி பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும் 2011 யூன் மாதம் தொடக்கம் பழுதுபார்க்கப்படாமல் பிரதேச சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 இன் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது அதில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் ஏதாவது ஒரு காலத்தில் சங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்ற மொத்த ஒப்பந்த எண்ணிக்கை மூன்றுக்கு மேற்பட முடியாதிருந்ததுடன் தற்போது கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் எஞ்சி பகுதிகளின் மொத்தப் பெறுமதி மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 2 மில்லியனை விஞ்ச முடியாதிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ஒரு விவசாயச் சங்கத்திற்காக ரூபா 125,000 தொடக்கம் ரூபா 2,375,000 வரையான 04 தொடக்கம் 09 வரையான ஒப்பந்தங்கள் 06 விவசாயச் சங்கங்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு